விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 4 ஜ அவ்வல் 20 இதழ் 33
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17—3—82

## "ஈழத் தமிழருக்கு உதவ தமிழகம் என்றும் தயார்!"

### 'யோகேஸ்' வரவேற்பில் நெடுஞ்செழியன்

சென்னை, மார்ச், 16

''இலங்கைச் சிங்களவர்களால் யோகேஸ்வரனின் வீடு தாக்கப்பட்டு, அவரது உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. அந்த அளவுக்கு எதிரிகளுக்கு அவர் வலிமையாகக் காட்சிதருகிறார்.''

இவ்வாறு தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. இரா.நெடுஞ்செழியன் யாழ்ப்பாண எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரனுக்கும் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் சென்னையில் நடாத்தப்பட்ட வரவேற்பு விழாவொன்றில் பேசுகையில் கூறினார்.

தமிழக சட்டசபை சபாநாயகர் திரு. கே. ராசாராம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நெடுஞ்செழியன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களுடைய வாழ்வுவளம் பெற வேண்டும், வரலாற்று அடிப்படைகொண்ட உண்மைகள் பாதுகாக்கப்பட வேண்டும். உலகிலுள்ள எல்லாத் தமிழர்களது உள்ளத்திலும் இலங்கைத் தமிழர்களது துன்பம் நிறைந்துள்ளது. உண்மைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கை தமிழர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க எவருக்கும் உரிமையுண்டு. இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்யவும் ஆதரவு அளிக்கவும் தமிழகம் என்றுமே தயாராக இருக்கிறது'' என்றார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளை மத்திய அரசு அனுதாபத்தோடு கவனித்துவரு

(8ம் பக்கம் பார்க்க)

★ ரூ. 6,80,000 கொள்ளைமுறியடிப்பு எதிரொலி:

வடபகுதிக் கொள்ளைச் சம்பவங்கள்

# அம்பலமாகின்றன!

# ரூபா 50 ஆயிரம் மீட்பு!

## குறிகாட்டுவான் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

**காங்கேசன்துறை ஊறணிப்பகுதியில் நேற்றுமுன்தினம் 6 லட்சத்து எண்பது ஆயிரம்ரூபா கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டு, இரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு வெளியான தகவல்களைத்தொடர்ந்து, வடபகுதிக் கொள்ளைச் சம்பவங்கள் சம்பந்தமாக பல தகவல்கள் அம்பலமாகியுள்ளன. பொலிசார் மேற்கொண்ட உடனடி நடவடிக்கையின் பலனுக நேற்று ஐம்பதினுயிரம் ரூபா மீட்கப்பட்டது.**

ஊறணிக் கொள்ளை முயற்சியில் கைதான இரண்டு இளைஞர்களில் ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே, மேற்படி ரொக்கப்பணம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது,

சில தினங்களுக்கு முன்னர், வேலணை ப. நோ. கூட்டுறவுச் சங்க காசாளரிடம் கொள்ளையடிக்கப்பட்ட ரொக்கப்பணமான ஐம்பதினுயிரம் ரூபாவே நேற்று மீட்கப்பட்டதாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்தது.

### துப்பாக்கிகள் மீட்பு

நிலைமை இவ்வாறிருக்க குறிகாட்டுவானில் இராணுவ வீரர் ஒருவரை கடந்த பாதம் 13ம் திகதி துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்துவிட்டு ஜீப்பிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட எஸ். எல். ஆர். ரக இரு துப்பாக்கிகளை ஊர்காவற்றுறை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

ஊர்காவற்றுறையில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட நான்கு இளைஞர்களின் விசாரணைகளைத் தொடர்ந்தே துப்பாக்கிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதுசம்பந்தமாக ஆயுதப் படையினர் 'ஜெயாமாஸ்டர்' என்பவரைத் தேடி வலைவிரித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## சுதந்திரக்கட்சி அரசியல்குழு இன்று கூடுகிறது

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம்பற்றி தீர்மானிப்பதற்காக கட்சியின் அரசியற் குழு இன்று கூடுகிறது.

கூட்டுத் தலைமை ஒன்றின் கீழ் பிளவுபட்ட கட்சியின் இரு பிரிவுகளையும் ஒன்றிணைப்பதற்கான சுமுகமான முடிவுகள் இக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை, உயர்மட்டக் குழுவொன்று நேற்று முன்தினமிரவு திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இக்குழுவில் திருமதி சிறிமா பண்டாரநாயக்க, திருவாளர்கள் அநுரா பண்டாரநாயக்கா ஸ்டான்லி திலகரத்தின, கே.சண்முகலிங்கம், கிங்ஸ்லிவிக்கிமரத்ன ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

ஊறணி கொள்ளை முயற்சி :

## கைவிடப்பட்ட உரப்பை: அதற்குள் துப்பாக்கி; கற்பூரம்!

(மாவிட்டபுரம்)

ஊறணியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கொள்ளை முயற்சியைத் தொடர்ந்து தப்பியோடிய சந்தேகநபர்கள் இருவரும் விட்டுச்சென்றதாகக் கருதப்படும் உரப்பையை கைப்பற்றிய காங்கேசன்துறைப் பொலிசார் அதனுள் ஒரு துப்பாக்கி இருக்கக் கண்டுபிடித்துள்ளனர்.

ஊறணி கிராமஅபிவிருத்திச்சங்க சம்பளப் பணம் ரூபா 6 லட்சத்து 80 ஆயிரம் துப்பாக்கிமுனையில் கொள்ளையிட முயன்ற கோஷ்டி ஒன்று பொதுமக்களின் எதிர்த்தாக்குதலால் தப்பியோடியபோது உரப்பை ஒன்றை கைவிட்டுச் சென்றிருந்தனராம் அதனை காங்கேசன் துறைப் பொலிசார் கைப்பற்றி ஆராய்ந்தபோது அதனுள் ஒரு துப்பாக்கி இருந்தது. அத்துடன் கற்பூரம் குளுக்கோஷ் என்பனவும் இருந்ததாம். இந்த உரப்பை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தப்பியோடியபோது துரத்திப்பிடிக்கப்பட்ட இரு சந்தேகநபர்களிடமிருந்தும் துப்பாக்கி ஒன்றும் பிஸ்டல் ஒன்றும் மீட்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இத்துப்பாக்கிகள்குறித்து பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இவை எங்கிருந்து பெறப்பட்டன? இவற்றுக்கு உபயோகிக்கப்பட்டவைகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை என்பன பற்றியும் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து

## ஒரு நாள் சிசு மர்ம மறைவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பிறந்த ஒருநாள் சிசு மாயமாக மறைந்துள்ளது!

நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பிறந்த இச் சிசு, நேற்றுக்காலை பத்துமணிக்குப் பின்னர் மர்மமான முறையில் காணுமற்போய்விட்டதாகப் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச் சிசுவின் தாயார் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி எஸ். பாலசுப்பிரமணியம் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டுள்ளார்.

இச் சிசு நேற்றுப் பகல், கறுப்பு நிறக் கார் ஒன்றில் கடத்திச்செல்லப்பட்டதாக பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

## நீர்வேலி கொள்ளை வழக்கு: 31-வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நீர்வேலி கொள்ளைவழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு இம்மாதம் 31ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேகநபர்களான குட்டிமணி [யோகச்சந்திரன்], தங்கத்துரை, ஜெகன், தேவன் ஆகியோர் பலத்த பாதுகாப்புடன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர். மற்றொரு சந்தேகநபரான சிறீசபாரத்தினம் தலைமறைவாகிவிட்டாரென்று தெரிவிக்கப்பட்டதையடுத்து அவரை இம்மாதம் 31ம் திகதி ஆஜராக்குமாறு நீதிபதி திரு ரியூடர் டி அல்விஸ் பொலிசாருக்கு உத்தரவிட்டார்,

அரசதரப்பில் சட்டத்தரணிகள் மொறிஸ் சில்வா, குமார சிறி ஆகியோரும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் மு. சிவசிதம்பரம், எஸ். நவரத்தினம், எஸ். ஸி. சந்திரகாசன், கே குமாரதாஸ், கே.வி. தவராசா ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கு, உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து இம்மாதம் 31ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம—இ)

கூலி உயர்வு கேட்டு

## தொழிலாளர் - முதலாளி தகராறு: வீடு சேதம்!

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத் தொழிலாளர்கள் எண்பத்தைந்து ரூபா கூலி கேட்கச் சென்றபொழுது முதலாளிகள் சங்கத் தலைவர் ஒருவரால் தாக்கப்பட்டனராம். இதனுல் ஆத்திரம் கொண்ட தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிலர் அந்த முத

(8 பக்கம் பார்க்க)

COMPUTERS

கொம்பியூட்டர்களில் உங்களுக்கு ஆர்வமிருக்குமானுல் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் நிகழும் தொழில்நுட்ப, விவசாயக் கண்காட்சியில்,

**டி. எம். எஸ். இலெக்ரேனிக்ஸ் லிமிற்றெட்**

ஸ்தாபனத்தாரின் பகுதிக்கு வந்து, கொமோடோர் கொம்பியூட்டர்களைக் (Commodore Microcomputers) காணுங்கள். எப்படி கொம்பியூட்டர்கள் உங்கள் வியாபாரத்துக்கு, கல்விக்கு மற்றும் துறைகளுக்கு உதவுமெனக் காணலாம்.

நாஷுவா சாதாரண தாளில் பிரதிசெய்யும் இயந்திரங்களையும் (Nashua Plain Paper Copiers) இங்கே காணலாம்.

கொழும்பு முகவரி:

106; கின்ஸி வீதி, கொழும்பு-8.

(2567)

**மணிவாக்கு**

அம்பலமாகாத எந்த அந்தரங்கமுமில்லை.

—பைபிள்

# நமது நோக்கு

## யாழ். அபிவிருத்திக்கு ஓர் அரிய சாதனம்

'உழுது பயிரிடாமல் உணவுகள் கிடைக்குமோ? உழைப்பும் களைப்புமின்றி உரிமைகள் அடுக்குமோ?' என்றொரு பாட்டு.

யாழ்ப்பாண அபிவிருத்தி பற்றி நாம் இதுகாறும் கண்டதெல்லாம் 'சொன்னதைச் செய்வதும் செய்வதே சொல்வதும்' என்ற கருத்துக்கு மாறாகவேஇருக்கிறது.

இந்த இருளடைந்த சூழ்நிலையில் உற்பத்தியைப் பெருக்கவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் திடமான நடவடிக்கைகள் எடுப்பதற்குயாழ்ப்பாணஇலங்கை வங்கி முன்வந்துள்ளது.

இவ்விடயம் பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உயர்தர கருத்தரங்கு உடனடி செயல் முறையில் இறங்க ஏதுவாயிருக்கிறது. யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமெனக் கொள்ளலாம்.

இந்தப் புதுப்பாதையில் இலங்கைவங்கி உதவியளிக்கவும் ஊக்குவிக்கவும் முன்னின்று உழைப்பது அபிவிருத்தியில் சம்பந்தப்பட்ட அனைவரின் பாராட்டுக்குரிய விடயம்.

உருப்படியான முதல் திட்டம் ஒன்று எது என்பதை மக்கள் நன்றாகப்புரியவேண்டும். இலங்கை வங்கியின் யாழ். கிளையில் ஏற்றுமதிப் பிரிவு ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சாதாரண மக்கள் வங்கியென்றால், பணம் போடவும், பணம்எடுக்கவும் உதவும்ஸ்தாபனமென்றும் அது செல்வந்தர்களின் கொடுக்கல் வாங்கலுக்குரிய பிரத்தியேகமான நிறுவனம் என்றும் அஞ்சியகாலம் இன்றும் முற்றாய் மறையவில்லை.

ஆயினும் இன்று பொது மக்கள், விவசாயிகள், தொழிலாளிகள் தொடர்பு கொள்ளும்நிலையமாகிவந்த போதும், ஒரு மாவட்டத்தின் பொருளாதாரத் தலைவிதியை நிர்ணயிக்கும் அங்கமாயமைவதை மக்கள் இன்றும்புரியமாட்டாரென்பதே எமது கருத்து.

எனவே இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக்கிளையின் இப்புதிய ஏற்றுமதிப்பிரிவு எவ்வாறு இயங்குமென்பதை பொதுமக்கள்நன்கறிவது அவசியம்.

உற்பத்தியில்லாமல்ஏற்றுமதி ஏது? ஆயினும் இங்கு உற்பத்தியாகும் பலவிவசாயப் பொருட்கள், கைத்தொழில் பொருட்கள் உலகில் பெருமதிப்புப் பெற்றிருப்பதை உற்பத்தியாளர்களே சரியாக உணர்ந்திருக்காத துரதிர்ஷ்டநிலை இன்றும் இங்குகாணப்படுகிறது.

பனந்தும்பு தொடக்கம் பனஞ்சாராயம் வரைக்கும் கற்பகத்தருவின் கணக்கற்ற கைத்தொழிற் பொருட்கள் இறால் தொடக்கம் இக்கடலில் பெருகும் பல மீன் வகைகள் வரைக்கும் யாழ்ப்பாண மாம்பழம் அதற்கு மேல் வாழைப்பழம் போன்ற தோட்டத் தொழிற் பொருட்கள் உலக சந்தையில் பெரும் மதிப்புப் பெற்றிருக்கின்றன. குறிப்பாக யாழ்ப்பாண வாழைப்பழம் ருசியும் தரமும் கொண்டதாக உலகளாவிய பெயர் பெற்றிருக்கிறது. நம் மாணவர்கள் வாழை + பழம் வாழைப்பழம் என்பதையே மனனம் செய்கின்றனர்.

நாம் இதுவரையும் கற்பனை செய்திராத அளவுக்கு இக்குடாநாடு விவசாயத்திலும், கைத்தொழிலிலும் பரந்த அடிப்படையில் வளர்ச்சியடைய நல்ல வசதிகள் இருப்பதை இக்கருத்தரங்கு நன்றாய் ஆராய்ந்திருக்கிறது போல் தெரிகிறது.

எனவே கமக்காரரும் கைத்தொழிலாளர்களும் தனித்து நின்றுமாரடிக்காமல் ஒன்றிய ரீதியில் வரையறை செய்யப்பட்ட உறுப்புரிமை கொண்ட கம்பனிகளாக செயற்படுவது மிக அவசியம்.

ஏன்? கம்பனிகளுக்கு வங்கி கடன் உதவும் அவற்றின் விவகாரங்களை அக்கறையுடனும் கண்டிப்பாகவும் கவனிக்கவும்கூடிய அவசியம்ஏற்படும்.

இரண்டாவதாக கம்பனியென்றால் யார் முதலாளி யார் தொழிலாளி என்ற பேரம் பேசல் நீங்கி ஒன்றுசேர்ந்து உழைக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். அவ்வித கடின உழைப்பால் ஸ்தாபன ரீதியில் உள்ளூரிலும் வெளியூரிலும் செல்வாக்கு வளர்ச்சியடைய வழி பிறக்கும்.

வறட்சி மிகுந்த இப்பிரதேசத்தில் 'தான் செத்துத்தானமும்'' நீண்டகால துன்ப அனுபவம் நீங்க வேண்டும். கூட்டுறவு முறையில் கம்பனி அமைப்பில் யாழ்ப்பாண இலங்கை வங்கியின் ஏற்று மதிப்பிரிவுடன் தொடர்பு வைத்தால் பல நலன்கள் உண்டாகும்; பல கஷ்டங்கள் நீங்கும்.

ஏற்றுமதியைத் துரிதப்படுத்த அரசாங்கம் என்னும் விகடராமன் குதிரை தனித்தியங்கினால் மாதம் காதவழிதான் தாண்டும். தனியார் பிரிவு அரசின் கண்காணிப்பில் திடமாகத் துரிதமாகத் தொழிற்படும்.

ஏற்றுமதிக்குரிய சகல நடவடிக்கைகளும் இலங்கை வங்கியின் இப்புதுப்பிரிவு கையாள முன்வந்திருப்பதால் இந்த கைங்கரியத்தை செயலில் மொழிபெயர்க்க நடவடிக்கைக் குழு உயிர்த்துடிப்புடன் இயங்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஆக்க வேலைகளை பரந்த அடிப்படையில் செய்து வெற்றிகாண்பது இலகுவானதல்ல. ஒவ்வொரு பற்றைக்குள்ளும் பல பாம்புகளைக் காணும் மரபு வளர்ந்த இடம் இது.

இருப்பினும் மாவட்ட அபிவிருத்திச் சபை ஒன்று நிறுவப்பட்டது வரலாற்று முக்கியமானது. அச்சபையில் திட்டங்கள் ஜாஸ்தி; நிதி 'கம்மி' எனவே இப்புதிய வழிக்கு அவர்களின் திட்டங்களும் வங்கியின் நிதியும் இணைந்தால் வெற்றி கிட்டும்.

---

பெருங்குளம் கொலை வழக்கு:

## "இறந்தவர் சைக்கிளுக்கு அருகே இரத்த வெள்ளத்தில் கிடந்தார்"

### பொலிஸ் பொறுப்பதிகாரி சாட்சியம்

[சாவகச்சேரி]

''சம்பவ தினம் சாவகச்சேரிப் பொலிஸில் பொறுப்பதிகாரியாக நான் கடமையாற்றினேன். ஒரு கொலை நடந்ததாகத் தகவல் கிடைத்ததன் பேரில் ஸ்தலத்திற்கு விரைந்து சென்றேன். அங்கு காலமானவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் அவர் ஓடிவந்த சைக்கிளும் அவர் அருகே கிடந்தது.''

பெருங்குளம் கொலைவழக்கு விசாரணையில் சாவகச்சேரிப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி செனிவரத்ன சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எச். எம். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சரசாலையைச் சேர்ந்த இளையதம்பி, பாலசுப்பிரமணியம் ஆகியோர் சதாசிவம் ராமலிங்கம் அல்லது யப்பான் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வாதி தரப்பில் பொலிஸ் சார்ஜன்ட் வி: செல்லையாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி திருமதி நளினி கணேசயோகனும், 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். தவராசாவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜரானார்கள். பொறுப்பதிகாரி செனிவரத்ன சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''காலமானவரின் சடலம் சனநடமாட்டமில்லாத தனிமையான இடத்தில் இருந்தது. அவரது உடம்பின் பிற்பகுதியில் 6 காயங்கள் இருந்தன, எல்லாக் காயங்களும் அவரது பிடரிக்கும், இடுப்புக்குமிடையேஇருந்தன: இறந்தவர் கழுத்தில் ஆழமான வெட்டுக்காயங்கள் இருந்தன. அந்த வெட்டுக்காயத்திலிருந்து தலைப்பக்கம் உடம்பிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. எனது அனுமானப்படி ஒரு மாதிரிப் படத்தைத் தயாரித்தேன். நான் அங்கு சென்றபொழுது பொலிஸ் கான்ஸ்டபிள் வல்லிபுரம் காவல் புரிந்தார்.

''ஸ்தலத்தில் நடைபெற்ற மரணவிசாரணையில் யாழ். சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தினார். அவரது அறிக்கையின்படி ஆழமான வெட்டுக்காயங்களிலிருந்து அதிகமான இரத்தம் வெளிப்பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக மரணம் சம்பவித்ததென்பது தெரியவந்தது. சடலம் மனைவியிடம் கையளிக்கப்பட்டது''

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ் தவராசா குறுக்குவிசாரணை செய்தார்.

சட்டத்தரணி: இறந்தவரின் மனைவியின் வாக்குமூலம் எப்போ பதிவு செய்தீர்? —நான் ஸ்தலத்திற்குச்சென்று 2மணித்தியாலத்திற்குள் பதிவு செய்தேன்.

சட்: அவரதுவாக்குமூலத்தை எங்கேபதிந்தீர்?— சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே பதிந்தேன்.

சட்: காலமானவரின் மனைவியை உமக்கு முன்னர் தெரியுமா?—அன்றுதான் அவரை முதன்முதலாகத்தெரியும்.

சட்: காலமானவரின் மகளின் வாக்குமூலத்தை எப்போது பதிவுசெய்தீர்?—சம்பவம் நடந்தமறுநாள் மாலை 6மணியளவில் பொலிஸ் நிலையத்தில்வைத்துப்பதிந்தேன்.

சட்: காலமானவரின் மகளை முன்னர் தெரியுமா? - வாக்குமூலம் பதியும்போதுதான் முதன்முதல் கண்டேன்.

சட்: காலமானவரைச் சுற்றி நின்றவர்களில்யாராவது சாட்சியாக வந்தார்களா?—அவர்களை நான் கேட்டபோது ஒருவரும் சாட்சிசொல்ல முன்வரவில்லை.

சட்: காலமானவரின் மனைவியின் வாக்குமூலம் ஸ்தலத்தில் ஏன் பதியவில்லை. —அவரின் தேகநிலை சரியில்லாததால்.

சட்: பின்னர் எப்போது பதிந்தீர்? — மறுநாள் 6 மணி வரை பொலிஸ் நிலையத்திற் பதிந்தேன்.

சட்: எதிரிகளை கைது செய்தது யார்? — சம்பவதினத்திற்கு 3 நாட்களின் பின்னர் சார்ஜன்ட் சிவலிங்கம் எதிரிகளைக் கைது செய்தார்.

2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் குறுக்கு விசாரணை செய்த பின்னர் பொலிஸ் கான்ஸ்டபிள் மென்டிஸ் சாட்சியமளித்தார்.

31ம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

---

## மக்கள் கருத்து

### உலக சமாதானம் நீடிக்க வேண்டும்

திருகோணமலை எண்ணெய்க்குத ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதென்ற செய்தி இலங்கைத் தாயகத்துக்கும் இந்திய உபகண்டத்துக்கும் ஒரு வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும்.

சமீபத்தில் சோவியத் வர்த்தக அமைச்சரும் இலங்கை வர்த்தக அமைச்சரும் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட செய்தியும் சிந்திக்கத்தக்கதான ஒரு சம்பவமாகும்.

இந்தியாவும், சோவியத் யூனியனும் நேரடியான தொலைபேசித் தொடர்பு அமைத்துக் கொண்ட செய்தி உலக சமாதானப் பாதுகாப்புக்கும் அரண்போன்றதாகும். கடந்த காலத்தில் அணுகுண்டினால் அழிவுற்ற யப்பானுக்கும் நீண்ட நெடுங்காலப் போரில் வதைந்த கொரியாவுக்கும் நேர்ந்தகதி உலக சமாதானத்துக்கு மீண்டும் ஏற்படக் கூடாதென்று பிரார்த்திப்போமாக.

ஹேமவதனி கந்தசாமி
சங்கானை.

---

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 4ம் திகதி
புதன்கிழமை
(17—3—82)

மேடம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள், வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும், அரச பயத்துக்கு இடமுண்டு, நிதானமாய் நடக்கவும்.

இடபம்: பகைமூட்டம் தோன்றும், பதட்டம் உடன் சேரும், மிகையான போக்கினால் மனதும் பாழாய்ப் போகும்.

மிதுனம்: இன்று எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும், களஸ்திரவழியால் பொருள் வரவும் உண்டு, பெரியோர் மதிப்பும் உண்டு.

கடகம்: கெளரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம் பெறலாம், தூற்றல்களைத் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், எதிலும் முன்னெச்சரிக்கை விரும்பத்தக்கது.

சிங்கம்: பூமியால் இலாபம் உண்டு, புத்திரர்களால் புகழும் சேரும், உடல் நலம் பாதிக்கக் கூடும் ஆகையால் உணவு விடயத்தில் கவனம் செலுத்தயும்.

கன்னி: தொழில்துறையில் புதிய வெற்றி கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமும் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்: மதிப்பு உயரும், இல்லத்தில் இனிமை தவழும், அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையால் சமாளித்துக்கொள்வீர்கள்.

விருச்சிகம்: வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும், வீணான சிந்தனையால் வேதனைப்படுவீர்கள், அவசரப்படாது அமைதியாக இருக்கவும்.

தனு: கவலையின் தாக்குதலால் பாதிக்கப்படுவீர்கள், ஆத்திர உணர்ச்சியைத் தடுக்கவும், அதிக சிந்தனைக்கிடமளியாது அமைதியுடன் இருக்கவும்.

மகரம்: புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

கும்பம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும், எதிலும் விரக்திமனப்பான்மை தென்படும், வேண்டாத நடவடிக்கைகளின்மூலம் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

மீனம்: அறவழிகளை மனம் நாடும், பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன்மூலம் பொருட் செலவுக்கு இடமுண்டு, சுற்றுடலில் மதிப்பு உயரும், சிலருக்கு காதல்துறையிலும் அனுகூலம் தென்படலாம்.

திருமலை க. வேலுப்பிள்ளை
சோதிடக் கலாநிதி

---

## இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுவரும் இலங்கை இளங்கலைஞர் மன்ற இசைவிழாவின் எட்டாம் நாளான இன்று செல்வி. நாகம்மா கதிர்காமர், திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாட்டுக்கச்சேரியும், பாரதி கலாமன்றம் திருமதி. ஞானமணி செல்லையாவின் மாணவிகளது பரதநாட்டியமும் இடம் பெறுகின்றன.

(க)

---

## கரிபியன் பேச்சில் இடமில்லை

வாஷிங்டன், மார்ச் 16

கரிபியன் பிராந்தியத்தில் நடக்கும் எவ்வித பேச்சுவார்த்தையிலும் சோவியத் யூனியனுக்கும் கியூபாவிற்கும் இடமில்லை என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

எல்சல்வடோரில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கு சோவியத்தும் கியூபாவும்ஆதரவளித்து வருவதாகவும் எல்சல்வடோர் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு இவ்விரு நாடுகளும் அழைக்கப்படமாட்டாதென்றும் அவர் தெரிவித்தார். (க)

## 6 பேர் பலி

புதுடெல்லி, மார்ச். 16

குஜராத்தில் கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் 9 பேர் இறந்தவர்கள். மற்றவர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

(க)

# ஆயுதப்போட்டி அதிகரிப்பு: இந்தியா-சோவியத் கவலே!

புதுடில்லி, மார்ச் 16

உலகில் ஆயுதப் போட்டி அதிகரித்து வருவதையிட்டு பாரதமும், சோவியத் யூனியனும் கவலே தெரிவித்துள்ளன.

புதுடில்லியில் சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திரு. டி. மிற்றிஉஸ்ரனேவுக்குஅளிக்கப்பட்டவிருந்தில்,மேற்கண்ட கவலே தெரிவிக்கப்பட்டது,

உலகில் ஆயுதக் குவிப்புக்கு கவலேயளிப்பதாக பாரதபாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் தெரிவித்தார், ஆசிய பகுதி சமாதானத்திற்கு ஆயுதப்போட்டி இடையூருக இருப்பதாகவும் கூறினுர்.

சிலநாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு முக்கியத்துவம் அளிக்காமல் ஆயுதக் குவிப்புக்கே முக்கியத்துவம் அளிப்பதாக அவர் குற்றம் சுமத்திஞர்.

பாரதம் அயல்நாடுகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்திவந்துள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

இவ்விருந்தில் பேசிய சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திரு, உஸ்ரனெக்,பாரதமும், சோவியத்தும், சகவாழ்வு ஒத்துழைப்பில் முன்மாதிரியாக இருந்துவருவதாகத் தெரிவித்தார்.

நம்பிக்கை பரஸ்பரமரியாதை ஒத்துழைப்பை இருநாடுகளும் கடைப்பிடிப்பதனுல், இருநாட்டு மக்களும் நன்மையடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசியபிராந்தியத்தில், பாரதம் சமாதானமுயற்சியைமேற்கொண்டுவருவதையிட்டு அவர் புகழ்ந்தார். (க)

# கொழும்பு நகரில் சிறுவர்களுக்கு வாந்திபேதி?

(கொழும்பு)

கொழும்பு நகரப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் வாந்திபேதிநோயினுல் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டரை வருடகாலத்தில் வாந்திபேதி நோயினுல் பாதிக்கப்பட்ட 120 பேரில் 8பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த ஜனவரியில் கொழும்பு நகரப்பகுதியில் வாந்திபேதிநோய் அதிகரித்துள்ளது. லேடிறிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் வாந்திபேதி நோயினுல் பாதிக்கப்பட்ட 27 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. கொழும்பு நகரத்திலும், கொலன்னுவ, ஜாஎல பகுதிகளிலும், இந்நோய் காணப்பட்டுள்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாந்திபேதியால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான விசேஷ வாட் ஒன்றைத் திறக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. வாந்திபேதியால் பாதிக்கப்பட்ட வெளியார்களே ஐ.டி.எச் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடைகளில் சாப்பிடவேண்டாமென்றும், கொதிக்கவைத்து நீரை அருந்துமாறும், சுகாதாரப்பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## கரந்தெனிய புதிய எம். பி.

(கொழும்பு)

கரந்தெனியா தொகுதிக்கு திருமதி சேபாலி சேனதீராவை ஐக்கிய தேசியக்கட்சி புதிய எம். பி.யாக நியமித்துள்ளது.

ஐ. தே. கட்சி பொதுச்செயலாளர் திரு. ஹர்சா அபயவர்த்தன, இதுபற்றி தேர்தல் ஆணேயாளருக்கு அறிவித்திருக்கிருர்.

இத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான திரு. பந்துல சேனரதீரா மரணமானதைத் தொடர்ந்து அவரதுமனேவிக்கு இப்பதவி வழங்கப்படுகின்றது.

## தாயகம் திரும்பினர்

(மன்னுர்)

அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களினுல் பாதிக்கப்

(6ம் பக்கம் பார்க்க)

## சோவியத் அமைச்சர்

# இந்திராவுடன் தனியாக சந்தித்து ஆலோசனே

(கொழும்பு)

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திரு, உஸ்ரனேவும், பாரதப் பிரதமர் திருமதி இந்திர காந்தியும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திஞர். இச்சந்திப்பின்போது, இருதலேவர்களேயும் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லே.

பேச்சுவார்த்தை விபரங்கள் எதுவும்வெளியிடப்படவில்லே.

இந்திய பாதுகாப்புக்கு இராணுவ உதவியளிக்க சோவியத் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதத்திற்கு புதிதாக, ஆயுதங்கள் வழங்குவதுபற்றி எவ்விதபேச்சுவார்த்தையும் இடம்பெருதென்றும், புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது (க)

# 5600 ஆசிரியர்களுக்கு மே மாதம் நியமனம்!

(கொழும்பு)

பாடசாலே விடுமுறையைத் தொடர்ந்து புதிதாக 5600 ஆசிரியர்கள் மே மாதம் நியமிக்கப்படுவார்கள்.

5000 பேர் மாவட்ட அடிப்படையில், கல்வித்தராதரப் பத்திரத்திற்கும், உயர்கல்விக்கும் அமைய தெரிவுசெய்யப்படுவார்கள். 600பேர் டிப்ளோமாஅடிட்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

சிங்களமொழி மூலம் 4000 ஆசிரியர்களும், தமிழ்மொழி மூலம் 1000 ஆசிரியர்களும் போட்டிப் பரீட்சை மூலம் மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் நேர்முகப்பரீட்சை இம்மாதம் 24ம் தேதி நடைபெறவிருக்கிறது. (க)

## தனிச்சிங்களத்தில் பத்திரங்கள்

(சாவகச்சேரி)

யாழ். கல்விப்பணிப்பாளர் அலுவலகத்துக்கு வரும் பத்திரங்கள் யாவும் தனிச்சிங்களத்தில் இருப்பதாக அதிபர்கள், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப்பத்திரங்களே நிரப்புவதற்கு சிங்களம் தெரிந்தவர்களே நாடிச்செல்லவேண்டியிருப்பதாகவும், இந்த அவலநிலேயை நீக்க கல்வி அதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தார்கள். (க)

## தவக்கால நற்சிந்தனே



ஆ! புத்தியீனனே, ஒரு நாளாவது உயிரோடிருப்பது உனக்கு நிச்சயமில்லாமல் இருக்கும்பொழுது நெடுங்காலம் சீவிப்பேனென்று எண்ணுவதெப்படி? எத்தனே பேர் நினேயாத நேரத்தில் உயிர் பிரிந்தார்கள். இவன் வாளால் வெண்டுண்டு இறந்தான், அவன் நீரில் அமிழ்ந்திச் செத்தான், இவன் உயரத்திலிருந்து விழுந்து மாண்டான், அவன் சாப்பிடும்போது செத்தான், இவன் விளேயாடும்போது இறந்தான், ஒருவன் நெருப்பினுல், வேறொருவன் கத்தியால், மற்றொருவன் கொள்ளே நோயால் மாண்டான் என்று நீ எத்தனேயோமுறை கேள்விப்பட்டிருக்கிருய். அவ்விதம் சகலருடைய முடிவும் மரணமே; மானிட சீவியம் நிழலேப்போன்று சீக்கிரத்தில் மறைந்துபோகின்றது.

(கிறீஸ்துநாதர் அனுசாரம்)

# "கூட்டுறவு ஊழியர்களுக்கு பல்வேறுபிரச்னேகளுண்டு"

(புலோலி)

"ஊழியர்களின் தேவைகள், பிரச்னேகள் என்பவற்றை ஆராய்ந்து அவற்றைப் பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போதுதான் அவர்கள் சிறப்பாகச் செயற்படவழியேற்படும். இதனே நிர்வாகம் உணர்ந்து செயற்படவேண்டியது அதன் கடமை. இந்நிலேயிலே இப்பல நோக்குக் கூட்டிறவுச் சங்க இயக்குநர் சபை ஊழியர்சளின் தேவைகள், பிரச்னேகள்பற்றி ஆராய்ந்து சுமுகமாகத் தீர்த்து வருவது பாராட்டப்படவேண்டியதாகும்"

இவ்வாறு, பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தேசிய ஊழியர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றிய இ. போ. ச. தேசிய ஊழியர் சங்க வடபிராந்திய அமைப்பாளர் திரு. திரு. கே. வி. சரவணபவானந்தன் குறிப்பிட்டார். பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க தேசிய ஊழியர் சங்கத்தலேவர் திரு. வி. இரத்தினசிங்கம் தலேமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய திரு. சரவணபவானந்தன் குறிப்பிட்டதாவது:

"கூட்டுறவு ஊழியர்களுக்கு பல்வேறு பிரச்னேகள், தேவைகள் காலத்திற்குக்காலம் ஏற்படுகின்றன. அவைகளே மனிதாபிமானத்துடன் ஆராய்ந்து தீர்த்து வைக்கவேண்டியது சங்க இயக்குநர் சபைகளின் கடமையும் பொறுப்புமாகும்.

"பருத்தித்துறைப.நோ.கூ. சங்கத்தின் மூன்னேய, தற்போதைய இயக்குநர் சபை நிர்வாகங்கள் ஊழியர்களின்பிரச்னேகள் தேவைகள் என்பனவற்றை ஆராய்ந்து சுமுகமான முறையில் தீர்த்து வருகின்ற அதே வேளேயில் ஏனேய சங்கங்களின் நிர்வாகங்களுக்கு பருத்தித்துறை ப நோ. கூ. சங்க நிர்வாகம் முன்மாதிரியாக இருக்கவேண்டும். இதன்மூலம் கூட்டுறவு அடிப்படையில் எமது நாடு அபிவிருத்தியில் மேம்பாடடைய வேண்டும்.

பருத்தித்துறை ப. நோ. கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத்தலேவர் திரு. கே. துரைராசா, பொதுமுகாமையாளர் திரு. எஸ். சதாசிவம், கூட்டுறவு அபிவிருத்திஉத்தியோகத்தர்களான திரு. நந்தகுமார், திரு. தணிகாசலம், முன்னே நாள் சங்க இயக்குநர் திரு. கந்தசாமி, கணக்காளர் திரு. எஸ். சர்மா, திரு. செல்வராசா தேசிய ஊழியர் சங்க செயலாளர் திரு. எஸ். சிவபாதம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (அ)

## கன்னியாகுமரி கலவரம்:

# இருபொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்

சென்னே, மார்ச் 16

கன்னியாகுமரி மாவட்டத்தில், பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தைத் தொடர்ந்து, இரு பொலிஸ் அதிகாரிகள் நேற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி, இராமச்சந்திரன், உயர்பொலிஸ் அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. உபாத்யாவும், உதவி பொலிஸ் சப்பிரீண்டன் திரு. செல்லத்துரையும், உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. பரதராமன், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இடமாற்றலாகிவந்துள்ளார்.

கன்னியாகுமரிபிஷப் டாக்டர் ஆதிநாயக்கசாமியை, முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சந்தித்து அங்குள்ள நிலேமைபற்றி ஆராய்ந்தார்.

கன்னியாகுமரி ஆட்சித்தலேவர் திரு. பிரனில்ஸ், அப்பகுதியில் மதுபானம் விற்பனேசெய்வதைத் தடைசெய்துள்ளார்.

இதேசமயம், பல்லனூர், கோணுறு ஆகிய கிராமங்களில், நேற்று புதிதாக கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. அங்கு பெரியபொலிஸ்படை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில், அமைதியைநிலே நாட்டும்பொருட்டு. துப்பாக்கியின்றி பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருதினங்கள் கலவரப்பகுதியைப் பார்வையிட்ட முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆஸ்பத்திரிக்கு சென்று காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறியபின் திருநெல்வேலி வழியாக சென்னேபுறட்பட்டார். (க)

## உணவுமுத்திரைபற்றி

# நவாலிப் பகுதியில் மீளாய்வு

(பண்டத்தரிப்பு)

நவாலிப்பகுதியில் உணவு முத்திரை விநியோகம்பற்றி மீளாய்வுசெய்யுமாறு வலி தென்மேற்குப் பிரிவ உதவி

(7ம் பக்கம் பார்க்க)

சன்யோ, வர்ண, கறுப்பு—வெள்ளே, தொலேக்காட்சிப் பெட்டிகளுக்கு, யாழ்ப்பாண மாவட்டத்தின் விற்பனேயாளராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம். உங்கள் தேவைகளுக்கும், குறைந்த செலவில், அன்ரனு அமைத்துக் கொள்வதற்கும் எம்மை நாடுங்கள்.

இலவச தொலேக்காட்சி அமைப்பு ஆலோசனே வழங்குவோம்-

வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேர்ஸ்

266 | 1, ஸ்ரான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில் - யாழ்ப்பாணம்.

# வட்டு. லயன்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரி வழங்கும் வளர்ச்சிகாண் கண்

(15-03-82 மு

தொழில் வளர்ச்சிகாண் கண்காட்சி
வெற்றிதரட்டும்!
உங்களுக்கு வேண்டிய
நஷனல், பிலிப்ஸ்,
சொனி, சன்யோ,
இன்னும் எந்தவகை டெலிவிஷன்களுக்கும், வீடியோ படப்பிடிப்புகளுக்கும், டெலிவிஷன் பூஸ்டர் ஏரியல்களுக்கும் யாழ்.நகரில் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
எஸ். சுலேமான்கண்டு அன் பிறதர்
5-7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்; 265.

வட்டு. லயன்ஸ் கண்காட்சி
வெற்றிபெற வாழ்த்துக்கள்!
வண்ணத் துணியுகத்து வளமார்
வகையனைத்தும் எண்ணம்போல்
தேர்ந்தெடுக்க ஏற்றதோர் எழிற்கூடம்.
கணேசன் ஸ்ரோர்ஸ்
63, 78, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வட்டு. கண்காட்சிக்கு எமது வாழ்த்துக்கள்!
பாலன் மில்ஸ்
(உரிமையாளர்: சு. இ. சோமசுந்தரம்)
வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டை.

வட்டு. கண்காட்சியும். செய்முறையும்
வெற்றியளிக்கட்டும்!
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்.
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7199

வட்டு. தொழில்நுட்பக் கண்காட்சி
வெற்றியளிக்கட்டும்!
கே. என். எம். மீருன்சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 585

20ம் திகதி சனிக்கிழமை மேடையேறுகிறது
நவாலி சகாயர் நாடகாலயம் வழங்கும்
லேடி ரைப்பிஸ்ற்
(நகைச்சுவை நாடகம்)
கதை, வசனம், நெறியாள்கை
திரைப்பட இயக்குநர்
கலைஞர் எஸ். அருமைநாயகம்.

வளர்ச்சி காண்தொழில்
நுட்பம் வளரட்டும்!
உங்களுக்குத் தேவையான
சகல பொருள்களுக்கும்
எங்களை நாடுங்கள்
ராஜு ஸ்ரோர்ஸ்
67; 69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 372

## ஒரு பார்வையில் தொழில்நு

வட்டுக்கோட்டை அரிமாக் கழகத்தினரும், வட்டுக்கோட்டையில் அமைந்திருக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரபல கல்லூரிகளில் ஒன்ருன யாழ்ப்பாணக் கல்லூரியும் இணைந்து வட்டுக்கோட்டை எம். பி.யின் அனுசரணையுடன் நடாத்தும் கண்காட்சியும் செய்முறையும் யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த பதினைந்தாம் திகதி ஆரம்பமானது. ஐந்து நாட்கள் வரை தொடர்ந்து நடைபெறும் இக்கண்காட்சியில், வளர்ச்சிகாண் தொழில் நுட்பம் என்பது பிரதான அம்சமாக இழையோடி இருக்கும். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் வட்டுக்கோட்டை அரிமாக் கழகத்தினர் ஆற்றும் சேவைகள் பற்றியும், இந்தக் கண்காட்சியின் நோக்கம், அமைப்பு என்பன ஓரளவு நினைவு கூரு புடைத்தாகும்.

### சேவை நிறுவன

அரிமாக் கழகம் சர்வதேச ரீதியாக வரும் ஒரு சேவை ஆகும். அதன் கிளை கையிலும், நன்கு பட்ட ஒழுங்கு மு றின் கீழ் சிறந்தசே வருகின்றன. அந்த வட்டுக்கோட்டை கழகம், மிக இளை முடையது. அது ஆண்டு தான் ஆரம் டது. ஆனாலும் ஆண்டு காலப் பகு சேவை ஆற்றுவதில் தக் கிளைக்கும் தான் தொன்றல்ல என்பன வகைகளிலும் அது துள்ளது. இதற்கு காட்சி சான்று பகர் வட்டுக்கோட்டை

வட்டு. வளர்ச்சிகாண் தொழில்நுட்ப
கண்காட்சியில் அமைந்திருக்கும்
எமது காட்சியறைக்கு
வருகைதாருங்கள்!
பனம் சீனி தயாரிக்கும்
முறையை வந்து பாருங்கள்!
புரேமோட்டோர்ஸ்
என்ஜினியரிங் கம்பனி லிமிட்.,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8006, 7394.

வட்டு.
கண்க
வா
பலவ
பானங்க
தரம
உய
அரஸ்கே
அரஸ்
163, கண்
கொழும்புக்கி

திருமணம் மற்றும் வைபவங்களை வர்ணப் படங்களாகவும், வீடியோத் திரைப்படங்க
பாரத் ஸ்ருடியோ
84, கஸ்தூரி
யாழ்ப்பாண
நவீனசந்தையில்
தொடர்புகொள்ள
பாரத் செ
178, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போ

# காட்சியும் செய்முறையும்

## முதல் 20-03-82 வரை)

# ல் வட்டு. வளர்ச்சிகாண்
# ல்நுட்ப கண்காட்சி

ன்பன பற்றியும்
வு கூருதல் ஏற்
.

றுவனம்

கழகம் என்பது
தியாக இயங்கி
வை நிறுவனம்
ன் கிளைகள் இலங்
நன்கு அமைக்கப்
கு முறையொன்
ந்தசேவைஆற்றி
அந்த வகையில்
டை அரிமாக்
இளைய பிராய
அது 1978ம்
ஆரம்பிக்கப்பட்
லும் இந்நான்கு
பகுதியினுள்,
வதில் மற்றெந்
தான் சளைத்த
ன்பதைப் பல
அது நிரூபித்
ற்கு இக் கண்
பகர்கிறது.
ட்டை அரிமாக்

## லயன் கலாநிதி வி. நித்தியானந்தன்

கழகம் அதுதொடங்கப்பெற்ற நாள் முதலே, இது போன்ற சேவை நோக்குடைய எந்த ஒரு கழகமும் ஈடுபடக் கூடிய பல பணிகளை மேற்கொண்டுள்ளது. இவை கல்வி தொடர்பானவையாகவும், சுகாதாரம் தொடர்பானவை யாகவும், விளையாட்டுத்துறை தொடர்பானவையாகவும் ஏனைய சமூக சேவைகள் தொடர்பா

(6ம் பக்கம் பார்க்க)

## எமது முயற்சி பயனுள்ள முறையில் கைகூடட்டும்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் சட்டத்தரணி க. குணரத்தினம் விடுத்திருக்கும் செய்தி:

சேவை செய்வதையே கொள்கையாகக் கொண்ட சர்வதேச அமைப்புடைய அரிமாக்கழகத்தின் அங்கமான வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட காலந்தொடக்கம் பல நற்பணிகளைப் புரிந்து வந்துள்ளது.

[7ம் பக்கம் பார்க்க]

## பொருட்காட்சி வெற்றி தரட்டும்

யாழ். திட்டமில் பிரதிப் பணிப்பாளர் திரு. ச. சிவதாசன் விடுத்திருக்கும் செய்தி:

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் பலரும் பல துறைகளில் உழைத்துவருகின்றனர். உலகின் பல பாகங்களில் விவசாயமும் கைத்தொழிலும் புரட்சிகரமான மாற்றங்களைக் காண்கின்றன. இவற்றின் போக்கிற்குப் பின்நிற்காது யாழ்ப்பாண மாவட்டத்திலும் முன்னேற்றம் காணவேண்டுமென்ற நோக்கம் மக்கள் மனதில் பதிந்துள்ளது. இந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விஞ்ஞான வளர்ச்சியையும் அண்மையில் தோன்றியுள்ள கைத்தொழில்களையும் பிரதிபலிக்கும் பொருட்காட்சியொன்றுமாணவர்களின் அறிவுவளர்ச்சிக்கும் பெரியோர் மனதில் ஒரு புதிய தென்பையும் ஏற்படுத்தவும் உதவுகின்றது.

பல கிழமைகளாக உழைத்து இப்பொருட்காட்சியை உருவாக்கிய பெருமை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்

(7ம் பக்கம் பார்க்க)

வட்டு. கண்காட்சி
வெற்றி பெறட்டும்!

வானொலிகளுக்கு,
வானொலிதிருத்த சேவைகளுக்கு
சிறந்த இடம்

றேடியோ மனுவல்
121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8222

## அபிவிருத்திச்சபை தலைவர் செய்தி!

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா விடுத்த செய்தி!

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் 'வளர்ச்சி காண் தொழில் நுட்பக் கண்காட்சி' சம்பந்தமான எனது ஆசிச் செய்தியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

(7ம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிபர் வாழ்த்துகிறார்

மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டசபைச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா விடுத்த வாழ்த்துச் செய்தி:

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சமூக சேவையில் ஈடுபட்டு வரும் ஸ்தாபனங்களில்

(7ம் பக்கம் பார்க்க)

## கண்காட்சிக் குழு

இணைத் தலைவர்கள்:
சட்டத்தரணி க. குணரத்தினம், ஜே. பி. யு. எம். தலைவர், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்.
திரு. க. கதிர்காமர் அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி.

குழு:
டாக்டர் ரி. பகிரதன், செயலாளர்,
டாக்டர் எமில் அத்தனசியர் பொருளாளர்.
டாக்டர் எஸ். நாகநாதர், திரு. இ. விஜயரத்தினம், திரு. கே. ஜே. செல்வராஜன், திரு. கே. அருணசலம் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், பேராசிரியர் ஜே. பி. செல்லையா, திரு. ரி. ரகு, திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஜி. டி. சோமசுந்தரம் திரு. எம். ஜி. பிள்ளைநாயகம், திரு. ரி. விஸ்வநாதன் திரு. டபிள்யு. டி. குலத்துங்கம், திரு. ரி. ஆனந்தரத்தினம், திரு. டபிள்யு. என். தேவகடாட்சம், திரு. சி. எல். தேவசகாயம், திரு. ஏ. இராஜசிங்கம், செல்வி. எம். எஸ். எலியாஸ்.

டு. தொழில் நுட்பக்
காட்சிக்கு எமது
வாழ்த்துக்கள்!

லவகை பழங்களின்
களுக்கு பெயர் பெற்றது
'அ ர ஸ் கோ'

ரமானது; சுவையானது
உயிர்ச்சத்துமிக்கது
கோ மாம்பழ நெக்டர்

ஸ்கோ லிமிட்.
ண்டி வீதி, யாழ்ப்பாணம்.
க்கிளை: 106 றெக்ளமேஷன் வீதி
கொழும்பு- 11

ங்களாகவும் கண்டுகளிக்க
ரியார் வீதி,
ணம். போன்: 252
ன் ர ர்,
போன்: 8265

வளர்ச்சிகாண் தொழில் நுட்பம்
மேலும் வளரட்டும்!

நோர்தேண் இன்டஸ்றீஸ்
112, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7158

VADDU - TRONDHEIM
VOCATIONAL TRAINING CENTRE
(Jaffna)

*Course Title:-* **Computer Programming and Data Processing**
*Topics:-*
1. Introduction to Computing and Data Processing
2. Programming in high level languages [BASIC, FORTRAN, COBOL] [60- HRS.]
3. Practical [20-30] hours on a Micro Computer [Actual handling of Computer]

*Course Prerequisite:-* Centre's Aptitude Test
**3rd Batch Starts on:** **20th March 1982.**
**Venue!-** **Formerly at 230, Saddhanathar Road, Nallur is shifted to**

**2nd Floor, Maniam Buildings
15, Sirambiady Lane, (off Stanley Road,
Jaffna. Near Sridhar Theatre)**

Lectures & Practicals: (Sat, Sun and Public holidays, 15-20 weeks)
Full Course Fee:- Rs. 3000/-
Course in BASIC only:- Rs. 1000/- (6 weeks)

Apply to:- **Director Vaddu: Trondheim V. T. C.
2nd Floor Maniam Buildings,
15, Sirambiady Lane, Jaffna.**

ஹரன் யாழ்.நகர்
Now Showing
Faye Dunaway, Tommylee Jones
EYES OF LAURAMARS
Horror Action Color
Strictly For Adults

வெஸ்லி வாணிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
சிவாஜி — விஜயா
ரிஷிமூலம்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
TOMHORN
From 18-3-82
DRAGON PRINCESS

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

சாந்தி (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 4.45 7.00, 9.30
Rex Harrison, Darmendra, Zeenath Aman
"SHALIMAR" Scope Color
An Action packed "English" Movie

ஸ்ரீதர் தினசரி 2.30, 8.30, 6.30, 9.30
முத்துராமன்—சுஜாதா
உறவுசொல்ல ஒருவன்
20.3.82 முதல் THE SPY WHO LOVE ME
James Bond 007
அடுத்த வெளியீடு
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களுடன்
5-வது வாரமாகக் காட்சியளிக்கிறது
யாழ்.றீகல்
தினசரி10—30, 2—00, 6—30, 9—30 (4 காட்சிகள்)
தனிமரம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30 6.30, 9.30
ஏ. வி.எம்.ராஜன்—பானுமதி—சோ
பூவும் பொட்டும்

2 வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வெற்றிகரமான மாதம
தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
10.30, 2.00, 4.30, 7.00, 9.30
HUNCH BACK OF NOTTRE DAM
(Color Scope)
18-3-82முதல் சிவாஜி-ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ-பத்மினி
குலமா குணமா புதிய பிரதி
விரைவில் எதிர்பாருங்கள்
சிவாஜி—கமல்—ரஜனி—ஸ்ரீபிரியா
நடித்த
நட்சத்திரம்

# ஒரு பார்வையில் வட்டு. .....

(5ம் பக்கத் தொடர்ச்சி) னவையாகவும் காணப்படுகின்றன. கல்வி தொடர்பாக அது மேற்கொண்ட பணிகளுள் நோர்வே நாட்டு அரிமாக் கழகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற் கல்வி நிலையம் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். அதில் தட்டச்சு, மோட்டார் வாகனப்பொறிமுறை, தையல் போன்ற பல வகையான தொழிற் கல்வி நெறிகள் தொடங்கப்பெற்று, இவற்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து வெளியேறிய ஒரு தொகுதி மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

## ஆங்கில தின நிகழ்ச்சிகள்

கல்வி விடயத்தில் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் பொருட்டு அது வட்டுக் கோட்டைக் கல்வி வட்டாரத்தில் மேற்கொண்ட ஆங்கில தின நிகழ்ச்சிகளும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. சுகாதார தொடர்பான விடயங்களில் பல பாடசாலைகளுக்கும் சென்று அவர்களின் வைத்திய தேவைகள் சிலவற்றைப் பூர்த்தி செய்தது மாத்திரமன்றி, சிறந்த சுகாதார நிலையைப் பேணக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதில் அது அதிக கவனம் செலுத்தியுள்ளது. விளையாட்டுத் துறையிலும் அதிகம் கவனம் செலுத்தியிருப்பது பாராட்டத்தக்கது.

அனாதை இல்லங்களுக்கு உதவுதல், கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், குளங்களை ஆழமாக்குதல் என்பவற்றிலும் அது ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

## குறுகிய காலத்தில் சிறப்பான சேவை

மேலே கூறப்பட்ட பலதரப்பட்ட சேவை முயற்சிகளின் நோக்கம், அவை எடுத்துக் காட்டுவதற்கேற்ப ஆங்காங்கே ஏற்படும் உடனடிப் பிரச்னைகளைக் களைவதேயாகும். ஆனல் ஒரு சிறந்த கழகத்தின் சேவை இவ்வாருன உடமைப் பிரச்னைகளுக்கு முகம் கொடுப்பதாக மட்டும் இருத்தலாகாது. சமூகத்தின் அடிப்படைப் பிரச்னை எது என்பதைக் கண்டறியமுயன்று அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளிலும் அது ஈடுபட முன்வர வேண்டும். வட்டுக் கோட்டை அரிமாக் கழகம் தனது குறுகிய காலப்பகுதியினுள் அத்தகைய ஒரு முறையில் சிந்தித்துச் செயலாற்றியிருப்பது பாராட்டப்படவேண்டியதாகும்.

## வளர்ச்சிகாண் தொழில் நுட்பம்

எந்த ஒரு சமூகத்திலும் பிரச்னைகள் பொருளாதார அடிப்படையினின்றுதான் எழுகின்றன என்பதைக் கருத்திற் கொண்டு இதனைத் தீர்த்து, மக்களுடைய வருமானத்தை அதிகரிப்பதற்குரிய முறைகள் சிலவற்றை அது எடுத்துக்கூற முயல்கின்றது. தகுந்த நுட்ப முறைகளே வருமானத்தை அதிகரிப்பதான சிறந்தமுறை என்றவகையில்தான், வளர்ச்சிகாண் தொழில்நுட்பமென்ற அணுகுமுறையை வட்டுக் கோட்டை அரிமாக் கழகம் முன்வைக்கின்றது.

இந்த அணுகுமுறை எந்த வகையிலும் வட்டுக்கோட்டை அரிமாக்கழகத்தைப்பொறுத்த வரை புதியதொன்றல்ல.

ஏற்கெனவே இரண்டுஆண்டுகளுக்கு முன்னர், 1980ம் ஆண்டு, இதே கழகம் ஒழுங்கு செய்த கண்காட்சியிலும் இதே அம்சம்தான் வலியுறுத்தப்பட்டது. வறுமை, வேலையின்மை, சனத்தொகைக்குமுறல், விலைவாசிகளின் உயர்வு போன்ற பல்வேறு பிரச்னைகளின் மத்தியில், இவற்றை எதிர்நோக்குவதற்குரிய எம்மிடமுள்ள வளர்ச்சிகளைச் சுட்டிக்காட்டிப் பிரச்னைகளை எவ்வாறு எதிர்நோக்கமுடியுமென்றதற்குரிய வழிமுறைகளையும் எடுத்துக் காட்டுவதே கண்காட்சியின் நோக்கமாகும். உலகெங்கணும் விவசாயம், கைத்தொழில் என்பவற்றில் பல மாற்றங்கள் வேகமாகவும் விரைவாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சிறந்த முறைகளும், புதிய நுட்பங்களும்பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுக்கு அடிப்படையான விஞ்ஞான அறிவும் வளர்ந்துகொண்டே செல்கின்றது. எனவே இவற்றைப் பொதுவாக எல்லாருக்கும் குறிப்பாக எமது இளைய தலைமுறையினருக்கும்எடுத்துக் கூறிக் காலத்துக்கு ஏற்ற அறிவினை அவர்கள்பெற்றுக்கொள்ளும்படிசெய்தல் அவசியமானதாகும். அது மாத்திரமன்றி, இந்த நுட்பங்களையும், அறிமுறைகளையும் எம்மைச்சூழவுள்ள வளங்களின் மீது பிரயோகித்து எவ்வாறு எமது குறிப்பான தேவைகளைப் பூர்த்தி செய்யலாமென்பதும் எடுத்துக் காட்டப்படவேண்டும். இந்தநோக்கத்திற்கமைய இன்றைய கண்காட்சியில் பல துறைகளைச் சார்ந்தவர்களும் பலதரப்பட்ட நுட்பங்களையும் முன்வைப்பதைக் காணலாம். இவற்றிற் சில, இயல்பாகவே, எமது தரத்துடன் ஒத்துப் போகக் கூடியனவாகவும், வேறு சில மேற்கு நாடுகளில் அபிவிருத்தியாகி இன்று எமது வாழ்க்கை முறையுடன்இணைய முற்படுபவையாகவும் காணப்படும்.

## இன்று நடக்கும் கண்காட்சியில்...

இன்றைய கண்காட்சியில் இடம்பெறும் காட்சிப்பொருட்களை இரு பிரிவுகளாக வகுத்துங்கொள்ள முடியும். முதலாவது பகுதியில் குடாநாட்டிலுள்ள பல விவசாயிகள் கைத்தொழிலாளர்கள் நிறுவனங்கள் என்பனவும் இரண்டாவது பகுதியில், அரிமாக் கழகத்துடன் இணைந்து கண்காட்சியில் பிரதான பங்கு வகிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியும் இடம்பெறுகிறது.

முதலாவது பகுதியில் விவசாயம் சார்ந்த காட்சிப் பொருட்களில் பனை வளங்களிலான பொருட்களை எடுத்துக் காட்டுவது முக்கிய இடம் பெறுகிறது. பனங்கட்டி உற்பத்தி செய்யும் முறையும் எடுத்து விளங்கப் படுகின்றது. கைத்தொழிற் பகுதியில் குடாநாட்டிலுள்ள பிரதான கைத்தொழிலாளர் எல்லாரும் தமது பொருட்களைக் காட்சிக்கு வைக்க முன்வந்துள்ளனர். இது கண்காட்சியில் பெருமளவானவர்களைக் கவருவதாகயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. நிறுவனங்களைப் பொறுத்த வரையிலும் முக்கியமானவை யாவும் பங்குபெறுகின்றன. துணைத்திட்டமிடல் அதிகாரியின் பூரண ஆதரவு கண்காட்சிக்குக் கிடைத்திருப்பதும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## சூரியசக்தி மூலம் வீட்டுப்பயன்

இலங்கை மின்சார சபையினர் சூரிய சக்தியைக் கொண்டு வீட்டுக்குரிய பல பாவனை உபகரணங்களையும் வானொலி தொலைக்காட்சி என்பவற்றையும் கூட எவ்வாறு இயக்கலாமென்பதை எடுத்து விளக்குன்றனர்.

சக்தி நெருக்கம் இன்று எம்மை எதிர்நோக்கும் ஒரு பாரிய பிரச்னையாகும். மின்சார சபையினரின் எடுத்துக் காட்டும் பெரிதும் பயனுடைய தென்பதில் சந்தேகமில்லை. நிறுவனங்களைப் பற்றிக் கூறும் போது வங்கிகள் பற்றிக்குறிப்பிடுவதும் அவசியமாகும். நுட்பங்கள் தெரிந்திருந்தும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்குரிய மூலதனவசதியில்லாவிட்டால் அதனல் பயனில்லை இந்நிலையில் வங்கிகளின் சேவை முக்கியமானதாகும். இன்று இலங்கையின் பிரசித்திபெற்ற வணிக வங்கிகளாக விளங்கும் இலங்கை வங்கி. மக்கள் வங்கி என்ற இரண்டும் கண்காட்சியின்போது தாம் வழங்கும் சேவைகளை எடுத்துக் கூறுவதுடன் மாத்திரமன்றி இலங்கை வங்கி கண்காட்சி இடத்திலேயே இச் சேவைகளை நடைமுறைப் படுத்தவும் முன்வந்திருக்கின்றன.

## கூட்டுமுயற்சியில் காட்சிப்பொருள்கள்

இரண்டாவது பகுதியிலடங்கும் யாழ்ப்பாணக் கல்லூரியின் காட்சிப் பொருட்கள் கண்காட்சியில் பலரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன இவைகல்லூரி ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கூட்டுமுயற்சியின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. கல்லூரி வாழ்வில் இணைந்துள்ள எல்லாருமே இதில் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிறுவர்களின் விஞ்ஞானப்பகுதியும், தொழில் நுட்ட நிறுவனத்தின் பகுதியும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அது மாத்திரமன்றி கல்லூரியின் எல்லாத் துறையினரும் கண்காட்சியில் ஈடுபடுவது பெரிதும் வரவேற்கப்படக் கூடியதாகும்.

## பொருட்காட்சியில் கலைநிகழ்ச்சிகள்

தொழில்நுட்பம், விஞ்ஞானம் என்ற பழுவான விடயங்களில் மாத்திரம் ஒருவர் விரக்தியடையாமல் இருக்கும் பொருட்டு தினமும் கண்காட்சியில் மாலை வேளைகளில் கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. யாழ். நாடக அரங்கம் கல்லூரியின் 'பொறுத்தது போதும்' என்ற ஜனதிபதி விருதுபெற்ற நாடகம் இந்நிகழ்ச்சிகளில் முன்னணி வகிக்கின்றது. இது தவிர வரணியூரானின் இரு நாடகங்கள், மாயா ஜால வித்தை, யாழ்பாணக் கல்லூரியின் கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறுகின்றன. கணனிமூலம் காட்டப்படவிருக்கும் சில விளையாட்டுகளும் பலருக்கும் விருந்தாக அமையும் கண்காட்சி நாட்களிலேயே இடம்பெறப்போகும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் புனித சம்பத்தரிசியார் கல்லூரிக்குமிடையிலான 'பெரும்' கிரிக்கட் போட்டியும் மேலதிக கவர்ச்சி அம்சங்களில் ஒன்றாகும்.

தொழில்நுட்பமும் கலை நிகழ்ச்சிகளும் வேறுபொழுது போக்குகளும் உங்களைக் களைப்படையச் செய்துவிட்டனவா? உங்களுக்கு வேண்டிய சிற்றுண்டி வகைகளையும் பானங்களையும் வழங்குவதற்கு வட்டுக்கோட்டை அரிமாக்கழக மகளிர் காத்திருக்கின்றார்கள்.

தொகுத்து நோக்கின் வட்டுக்கோட்டை விழாக்கோலம் பூணும் இந்தச் சில தினங்களில் வட்டுக்கோட்டைப் பிரதேசமக்கள் மாத்திரமின்றி யாழ்ப்பாண மாவட்ட மக்கள் முற்றுகவே கண்டுகளிப்பதற்கும் பயன்பெறுவதற்குமான ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை வட்டுக்கோட்டை அரிமாக்கழகத்தினர் ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றனர்.

---

## தாயகம்.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)
பட்டு அகதிகளாக்கப்பட்ட 173 இந்திய வம்சாவழியினர் தலைமன்னர்—இராமேஸ்வரம் கப்பல்மார்க்கமாகத் தாயகம் திரும்பினர்.

அகதிகளாக்கப்பட்டு தாயகம் செல்லும் இறுதி இந்திய வம்சாவழியினர் இவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் இ. தொ. காவின் பிரதிநிதி செல்வமும் தலைமன்னருக்குவந்து அகதிகளைக் கப்பல்மார்க்கமாகத் தாயகம் அனுப்பி வைத்தார்.

(க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், பகுதியாகவும் பெற்றுக்கொள்ளலாம். C/o ஸ்ரீலங்கா அச்சகம், 234A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 2555

யாழ்ப்பாணம் சட்டநாதர் வீதியில் புதிய வீட்டுடன் கூடிய 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம். நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இ. கமலநாதன், சட்டத்தரணி, ஆடியபாத வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். 2561

நவீன உலகத்தினுட் பிரவேசிக்க ஒரே ஒரு திறவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ் வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்' எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## விற்பனைக்கு

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 'பஜாஜ்' ஓட்டோ டெலிவரி வான் இல 34/4773 கூடிய விலைகோருபவர்களுக்கு விற்பனைக்குண்டு. இதனை யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் பின் கராஜில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். பரிசீலிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளுக்கு 22.3.82, 23.3.82 ஆகிய இரு தினங்களிலும் இயக்கிக்காட்டலாம். விண்ணப்பங்கள் மேற்படி சங்கத் தலைவரால் 27.3.82 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
நெடுந்தீவு
ப. நோ. கூ. சங்கம்.
2550

## கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாண கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலைக் கட்டிடத்தைத் திருத்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி 29—3—82.

விபரங்களுக்கு:
**ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை,**
12-14, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 2565

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது) சுன்னாகம்

பின்வரும் பதவிகளுக்கு சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இலிகிதர்.
02. அரிசியாலை இயந்திர இயக்குனர்.
03. காவலாளி.
04. நெல் குற்றும் ஆலை அனுபவமுள்ள கூலிகள்.

காரியாலயத்தில் ரூபா 2/— செலுத்தி விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 24—03—82

சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
15—03—82 2562

## பாரதி சனசமூக நிலையம்

**31வது ஆண்டு விழாவும்
மேல்மாடிக் கட்டிடத் திறப்புவிழாவும்
காலம்: 13, 14-04-1982**

நிகழ்ச்சிகள்:
1. கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி (4பேர். 20 நிமிடம்)
2. நாடகப் போட்டி (45 நிமிடம்)
3. சைக்கிள் ஓட்டப் போட்டி (25 மைல்) ஆண்கள்.

இன்னும் பல நிகழ்ச்சிகள்

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25-03-82**

சி. குணேசலிங்கம்
செயலாளர்.

பாரதி வீதி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை. 2559

## திருமண அழைப்பு

மணமகன் — **செல்வன் இராஜேந்திரா**
மணமகள் — **செல்வி கலைச்செல்வி**
மணநாள் — **துர்மதி - பங்குனி - 7ம் நாள் (20-3-82) சனிக்கிழமை.**
மங்கலநாண் பூணல் — **பிற்பகல் 7-35 மணி தொடக்கம் 8-40 மணி வரை.**
இடம் — **'விக்னேஸ்வரி வாசா' 54, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.**

திருமண வைபவத்திற்கு வருகைதந்து வாழ்த்திச் சிறப்பிக்க தங்களை வணக்கத்துடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்

| | |
|---|---|
| வே. ப. சண்முகநாதன் தம்பதிகள் | அ. செ. குலநாயகம் தம்பதிகள் |
| (மணமகனின் பெற்றோர்) | (மணமகளின் பெற்றோர்) |
| 3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | 54, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம். |

(2558)

## பிஸ்கால் விற்பனை

### யாழ் மாவட்ட நீதிமன்ற

வழக்கு இல. காசு/சு/708

1. நாகர் தம்பையாவும் பெண்
2. சிதேவியும் இருவரும், 47, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

—வழக்காளிகள்

எதிர்

1. வேலுப்பிள்ளை கந்தரும் பெண்
2. வெள்ளைச்சி இருவரும், இராஜேஸ்வரிவீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

—எதிராளிகள்

மேற்சொல்லிய எதிராளிகளிடமிருந்து வெளியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 1720/—ம் மேலும் ரூபா 1000/—க்கு 6—11—79லிருந்து 10—2—81 வரைக்கும் நூற்றுக்கு 12 வீத வட்டியும், பின்னர் முழுத்தொகை இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் வழக்குச் செலவும் (கணக்குப் பார்க்கப்படவுள்ளது), 10—2—81ல் மேற்படி வழக்கில் தீர்ந்த தீர்வையை எதிராளிகள் நிறைவேற்றத்தவறிப் போனதால், இதன் பின் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனங்களின் சகல உரித்துக்களையும் 1982ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி காலை 10—00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனங்களில் நின்று யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றப் பிஸ்காலாகிய என்னால், பிஸ்கால் விற்பனை நிருவாகங்கட்கமைய பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

தா. குலஞானம்
பிஸ்கால்
யாழ். மாவட்ட நீதிமன்றம்

### விற்பனவுசெய்யப்படும் ஆதனடாப்பு

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி பகுதி சிவியாதெரு இறை 'மேட்டுவயல்' நில பர2. எல்லைகள்

கிழக்கு—கற்கண்டுவின் ஆதனம்
வடக்கு—றோட்டு
மேற்கு—நீலாம்பிகைக்கு உரிய ஆதனம்
தெற்கு—கந்தையாவுக்கு உரிய ஆதனம்

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், நல்லூர் கோயிற்பற்று, நல்லூர் இறை 'நாயன்மார்குளம் தெற்குப் புலம்' நில.பர 10, இதில் நில அளவையாளர் திரு. C.இராமநாதன் அவர்களால் 11—6—75ல் தயாரிக்கப்பட்ட 110ம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட நில.பர. 2 7.8 குளி. எல்லைகள்

கிழக்கு—கே. எஸ். விஸ்வலிங்கத்தினுதனம்
வடக்கு—இராஜேஸ்வரி றோட்
மேற்கு—ஒழுங்கை முகப்பும், சின்னத்தம்பி கந்தையாவுக்கும் சிதம்பரம் அம்பலவாணர் கோவிலுக்கும் உரிய ஆதனம்
தெற்கு—சண்முகம் பெண் அகிலாம்பிகைக்கு உரிய ஆதனம்.

தா. குலஞானம்
பிஸ்கால்
யாழ் மாவட்ட நீதிமன்றம்

2566

## உணவுமுத்திரை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் விடுத்த பணிப்புரையை அடுத்து நான்கு விசேடசேவை அலுவலர்கள் நவாலிக் கிராமத்தில் வீடுவீடாகச்சென்று உணவு முத்திரை கிடைக்கப்பெற்றவர்களை விசாரணைசெய்துவருகின்றனர். இப்பகுதியில் உணவு முத்திரை விநியோகத்தில் பல முறையீனங்கள் நடைபெற்றுள்தாக வலி. தென்மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவாவுக்கு கிடைத்த பல முறைப்படுகளை அடுத்து இந்த மீளாய்வுகளை நடத்தி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நான்கு விசேட சேவை உத்தியோகத்தர்களை அவர் பணித்துள்ளார்.

## அபிவிருத்தி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கு இத்தகைய கண்காட்சியொன்று தேவையென நாம் கருதும் இச்சமயத்தில், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் தொழில்நுட்பத்துறையில் இப்பகுதி மக்களுக்கு அரிய பல சேவைகளையாற்றிவருகின்றது. இரண்டு லட்சம் ரூபா செலவில் இயங்கும் வட்டு—ரொன்டேயிம் தொழிற்பயிற்சி நிலையம் இதற்கு அத்தாட்சியாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் கம்பியூட்டர் பயிற்சியை ஆரம்பித்த பெருமையும் இவர்களையே சாரும்,

ஒரு மாவட்டத்தின் அபிவிருத்தி, அம்மாவட்டத்தின் பல்வேறு ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பில் தங்கியுள்ளது. வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் போன்றவர்களின் முயற்சிகள் எமது அபிவிருத்திக்கு உதவியாக இருக்கின்றது.

இக்கண்காட்சியைப்பொறுப்பெடுத்து நடாத்தும் லயன்ஸ் கழகத்தினர், சட்டத்தரணி திரு. க. குணரத்தினம், அதிபர் திரு. கதிர்காமர் ஆகியோருக்கும், அவர்களுடன் இணைந்து கடமையாற்றுவோருக்கும் எனது பாராட்டுக்கள்.

## எமது

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பயனுள்ள பல்வேறு துறைகளில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இக்கழகம் இயங்கி வருகின்றது. அவற்றில் ஒன்றுக இக்கழகம் வளர்ச்சி காண் தொழில்நுட்பம் கண்காட்சியும் செய்முறையும் என்பதனை 1980 ம் ஆண்டு பேராசிரியர் பாலன் செல்லையா தலைமையில் நடாத்தியது. அதன் இரண்டாவது கட்டமாக இவ்வாண்டு பங்குனி மாதம் 15 ம் திகதி தொடக்கம் 20 ம் திகதி வரை குறித்த கண்காட்சியை நடாத்துகின்றது. லயன்ஸ் மாவட்ட ஆளுனரின் பணிப்பின் பேரிலும் பொதுமக்களின் வேண்டுகோளின் பேரிலும் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு எஸ். சிவதாசன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. கதிர்காமர் ஆகியோரின் ஆசியுடனும் உதவியுடனும் இம் முயற்சி கைகூடுகின்றது.

வறுமை, வேலைவாய்ப்பின்மை. விலைவாசி உயர்வு போன்ற பல பிரச்சினைகள் உள்ள நேரத்தில் மக்களிடையே அவற்றினை நிவர்த்தி செய்யும் வழிவகைகளை காட்டுவதற்கும், தொழிற் துறையிலும், விவசாயத் துறையிலும் கல்வித்துறையிலும் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் இம் முன்னேற்றத்தில் ஏற்கெனவே பங்கு கொண்டோரை ஊக்குவிக்கவும் எமது மாவட்டத்தை வளம் படுத்தவும் எமது முயற்சி பலனளிக்குமெனக் கருதுகின்றேன்.

சேவை தனிநபருக்காகவோ ஒரு சில நக[illegible] ஸ்தாபனங்களுக்காகவோ ஒதுக்கப்பட்டதொன்றல்ல. எமது முயற்சி [illegible] முறையில் [illegible] களின் ஆசியையும் உதவியையும் [illegible] பங்[illegible] வேண்டு[illegible]றேன்.

## கிராமோதய சபைத் தலைவர்



வலி. வடக்கு பளை - வீமன்காமம் கிராமோதயசபைத் தலைவராக வீமன்காமம் மகா வித்தியாலய ஆசிரியர் திரு. க. செல்வத்துரை தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் வீமன்காமம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், வீமன்காமம் மகா வித்தியாலய அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும், யூனியன் கல்லூரி அபிவிருத்திச் சபை செயலாளராகவும், யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொருளாளராகவும் இவ்வொன்றியத்தின் வலிகாமம் வடக்கு கிளைத்தலைவராகவும் இருந்துவருவதுடன் வீமன்காமம் இளைஞர் சங்கத்தினதும் சனசமூகநிலையத்தினதும் செயற்குழு உறுப்பினராகவும் இருந்து பொதுப்பணியாற்றிவருகிறார்.

## யாருக்கும் ஆபத்தில்லை

(கரவெட்டி)

கொடிகாமம் வீதியிலிருந்து மிகவேகமாக வந்தஉழவு இயந்திரம் ஒன்று, நெல்லியடிச் சந்தியில் பருத்தித்துறையை நோக்கித் திரும்பும் முடக்கில் திரும்பியபோது பின் பெட்டி குடைசாய்ந்தது கடந்ததிங்கட்கிழமை நடந்த இச்சம்பவத்தின்போது சம்பவம் நடந்த இடத்தில் இருந்த மக்கள் எதுவித ஆபத்துமின்றித் தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டார்கள்.

பாடசாலையால் வந்துகொண்டிருந்த சிறுவர், சிறுமியர் கூக்குரலிட்டபடி பலதிசைகளுக்கும் ஓடிச்சென்றார்கள். இதனால் பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியில் சுமார் அரைமணி நேரமாகப் போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது.

உழவு இயந்திர சாரதி காயமும் இன்றித் தப்பினார். (அ)

## பொருட்காட்சி....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சாரும். அதைக் காண்போர்கள் அடையும் பயனால் யாழ்ப்பாணம் முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பதில் நம்பிக்கையுண்டு. இப்பொருட்காட்சி எல்லோரும் போற்றி வெற்றிபெற்றுப் பலன் அளிக்க வேண்மென வாழ்த்துகிறேன்.

## யாழ்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியில் நிற்பவற்றில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் ஒன்றாகும். பல துறைகளில் சமூகசேவைகள், தொழிற்பயிற்சி நிலையம், கம்பியூட்டர் பயிற்சி முதலிய சமூகத்திற்குப் பயன்தரும்விடயங்களை இக்கழகம் செய்துவருவது பாராட்டுக்குரியது. விவசாயத்தொழில் அபிவிருத்தியில் இம்மாவட்டம் முன்னேறும் இச்சமயத்தில் 'வளர்ச்சி காண் தொழில் நுட்பம்' என்ற இக்கண்காட்சியை இக்கழகத்தினர் நடாத்துவது மிகவும் பொருத்தமானதே. சமூகத்திற்கும், இம்மாவட்டத்திற்கும் பல துறைகளில் சேவையாற்றி முன்னேற வட்டு லயன்ஸ் கழகத்தினருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

# ஹோம் பினன்ஸ்

லிமிட்.

## திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14'', 20''

## திடகாத்திரமான

**சைக்கிள்கள் (HELMET) -தொப்பிகள்**

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

**மின் பம்புகள்**

**கட்டுப்பண முறையிலும் பெறலாம்**

# ஹோம் பினன்ஸ்

லிமிட்.

இல. 82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை யோககுரு

வல்வெட்டித்துறை, காலஞ்சென்ற தண்டயல் செல்லத்துரை தம்பதிகளின் புதல்வனும், பிரபல வர்த்தகருமான யோககுரு வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னாரின் மரணச் சடங்குகள் இன்று புதன்கிழமை 17—3—82 மாலை ஐந்து மணியளவில் ஊறணி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

2563 — செல்லத்துரை குடும்பத்தினர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்றுமாலை நடைபெறவிருக்கும் சம்பத்திரிசியார் கல்லூரித் தினவிழாவில் மன்னார் ஆயர்பேரருட் பெருந்தகை தோமஸ் சவுந்தரநாயகம் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்கிறார். மாலை திருப்பலியும் கல்லூரிக் கொடியேற்ற வைபவமும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (கி)

## ஈழத் தமிழருக்கு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது என்று தமிழக சபாநாயகர் திரு. ராசாராம் தமது உரையில் குறிப்பிட்டார்.

ரூபா 20 ஆயிரம் (இந்தியன் கரன்ஸி) பெறுமதியான 25 பட்டுச்சேலைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், குத்துவிளக்குகள், ஸ்டவ் அடுப்பு போன்றவற்றை திரு.ராசாராம் திரு. யோகேஸ்வரனுக்கு விழாவில் அன்பளிப்பாக வழங்கினர்.

ரூபா 10 ஆயிரம் பண முடிப்பொன்றை திரு. நெடுஞ்செழியன் கவிஞர்காசி ஆனந்தனுக்கு வழங்கினர். (ம)

## தொழிலாளர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளியின் வீட்டை கற்களாலும், போத்தல்களாலும் தாக்கிசேதப்படுத்தினர் என்று பொலிஸ்நிலையத்தில் புகார்செய்யப்பட்டுள்ளது.

முதலாளிமார் சங்கத் தலைவர்களில் ஒருவரின் வீட்டிலேயே நேற்று இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இவரிடத்தில் வேலை செய்வோரும், இவர்களுக்கு அனுசரணையாக மேலும் சுமார் 200 தொழிலாளர்களும் கூலியாக 85 ரூபா தரும்படி கேட்டதன் எதிரொலியாகவே மேற்படி தாக்குதல் சம்பவம் நிகழ்ந்ததாம்.

இதுசம்பந்தமாக திரு. குமாரவேலு யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர். (மா)


## வேலைக்கு உடனே ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர் (Bubblers) கெல்ப்பர் (Helpers) புளோவர் (Blowers) போன்றவர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும். அனுபவமுள்ள Bottle & Press Machine இயக்குனரும், கெல்பரும் தேவை.

உடனே நேரில் வரவும்,

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**

நீர்வேலி 2541

## யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு

# புதிய பஸ்சேவை!

யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத்தீவுக்கு புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

× பஸ் சேவை நேரம்

யாழ்ப்பாணம் காலை 5-00 மணி ➤ முல்லைத்தீவு காலை 8-00 மணி

முல்லைத்தீவு காலை 8-15 மணி ➤ யாழ்ப்பாணம் பகல் 11-15 மணி

பாதுகாப்பான — சௌகரியமான சேவை இது

பிரத்தியேக வாடகைக்கு பஸ்கள் விடப்படும்.

**வி. ஆர். வி. ட்ரான்ஸ்போட்,**

188/3, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8162


## மரண அறிவித்தல்

### எஸ். எஸ். குருபாதம்

(இளைப்பாறிய விலைமதிப்பாளர்)

திரு. எஸ். எஸ். குருபாதம் காலமாகிவிட்டார். இவர் மக்டலீனின் அன்புக் கணவரும், சரோஜினி, விஜயலக்சுமி, சுதன், வினோ ஆகியோரின் தகப்பனாரும், சந்தியானந்தன் (அச்சுவேலி), இக்னேசஸ் பெரேரா (டாக்டர்) அவர்களின் மாமனாருமாவர். இன்று புதன் கிழமை (17—03—82) பிற்பகல் 4மணிக்கு 140, 1—ம் குறுக்குத் தெருவிலிருந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக பண்ணை புதுசேமக்காலைக்கு (மெதடிஸ்ற்) எடுத்துச் செல்லப்படும். 2570

## மரண அறிவித்தல்

### மனோரஞ்சிதமலர் அருள்பிரகாசம்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி இளைப்பாறிய ஆசிரியை திருமதி மனோரஞ்சிதமலர் அருள்பிரகாசம் 14—03—82ல் காலமானார். அன்னார் மருதானை புகையிரத நிலைய அதிபர் T. அருள்பிரகாசத்தின் அன்பு மனைவியும், தவக்குமார் (U.K.), இராசகுலமதி U.K.) அவர்களின் அருமைத் தாயாரும், டாக்டர் R. இராசக்குமார் (U. K.)இன் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிராசாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. M. தம்பு, திருமதி தம்புவின் மருமகளும், தவமணி, சுந்தரராசா (லைபீரியா) டாக்டர் சிங்கராசா பொன்மணி, துரைராசா இரத்தினராசா (கிராமசேவை உத்தியோகத்தர்), அரியகுணராசா, கிறிஸ்ரபெல் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பிரதம கணக்காளர்), செல்வராசா (புகையிரதநிலைய அதிபர்), லோகினி(ஆசிரியை) செல்வநாயகம் (பிரதி அத்தியட்சகர், திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு), காலஞ்சென்ற ஜெயரத்தினம், எமிலி, வணக்கத்துக்குரிய சாம் தம்பு பாக்கியம், நேசம், ஜேம்ஸ், ஞானம், மணி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிசான் [U. K.] நிருசனு [U. K.] அவர்களின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை 18—3—82 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து சாவகச்சேரி கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 2571


# 'நெஷனல்' வழங்கும் மற்றுமொரு மகத்தான சேவை!

எங்களிடம் நீங்கள் நெஷனல் ரெலிவிஷன் வாங்கி ஆதரவும் உற்சாகமும் அளித்ததற்காக

## ஜப்பானிய மற்சுசிற்று கம்பெனி

தொழில் நுட்ப நிபுணர் ஒருவரை

**இன்று 17-03-82 முதல் ஒருவார காலத்துக்கு**

எம்முடன் இணைந்து 'ஏரியல்' பொருத்துவதில் உங்களுக்கு உதவும் முகமாக அனுப்பி வைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## நீங்கள் இதுவரை ஒரு T. V. வாங்கவில்லையா?

சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் இன்றே எம்மிடம் ஒரு நெஷனல் T. V. வாங்கி

திருப்திகரமான ஜப்பானிய நிபுணர்களின் அரிய சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## சந்தர்ப்பங்கள் எப்பொழுதும் நாடி வருவதில்லை

# V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி, (போன்: 7447) யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.